[2018 மார்ச் 20

வினா வரிசை எண் 59, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. மருதமுத்து, மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

59—

சொந்தக் கட்டடம்

***7369—திரு. அ. மருதமுத்து:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கெங்கவல்லி தொகுதி, பேளூர் கிராமத்தில் உள்ள தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கெங்கவல்லி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற கேள்விக்கான பதில். கெங்கவல்லி தொகுதி, பேளூர் கிராமத்தில் உள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட தற்போது சாத்தியக் கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. மருதமுத்து அவர்கள்.

திரு. அ. மருதமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டுமொத்த உலகத் தமிழர்களின் நெஞ்சங்களிலும், இல்லங்களிலும் வாழ்ந்து மறைந்து, வங்கக் கடலோரம் துயில்கொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களையும், மாண்புமிகு இதய தெய்வம்

2018 மார்ச் 20]

டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் வணங்குகிறேன். கொங்குநாட்டு சீமைகொடுத்த தங்கம், சேலம் மாவட்டத்து சிங்கம், (மேசையைத் தட்டும் ஒலி) மாங்கனி மாவட்டத்தினுடைய மண்ணின் மைந்தர், ஏழையெளிய மக்களுடைய நம்பிக்கை நட்சத்திரம், விவசாயிகளுடைய விடிவெள்ளி, என்னை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் அடையாளம் காட்டி, இந்த மாமன்றத்திலே பேசுகின்ற அளவுக்கு முன்னேற்றத்தை ஏற்படுத்திக் கொடுத்த எங்கள் குடும்ப தெய்வம், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணார் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணார் அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்கி, என்னுடைய கேள்வியைத் துவங்குகிறேன்.

என்னுடைய கேள்வியில் 95 பேளூர் என்று எழுதியிருக்க வேண்டும். அந்தக் கிராமமானது மலைவாழ் மக்கள் வாழ்கின்ற பகுதி. அதிலே 95 என்பது தவறுதலாக விட்டுவிட்டது. அதை 95 ஆகப் பதிவுசெய்யுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

95 பேளூர் கிராமமானது மலைவாழ் மக்கள் வாழ்கின்ற பகுதி. அங்கே நாள் ஒன்றுக்கு ஆயிரம் லிட்டருக்கும் அதிகமாக பால் உற்பத்தி செய்யப்பட்டு, விநியோகம் செய்யப்பட்டு, தமிழக அரசுக்கு வருவாயை ஈட்டிக் கொடுக்கக்கூடிய கிராமம் ஆகும். அங்கு இருக்கக்கூடிய மலைவாழ் மக்கள் பயன்பெறும் வகையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சருடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, மலைவாழ் மக்களுடைய கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் பால் கூட்டுறவுச் சங்கக் கட்டடம் கட்ட ஆவன செய்யுமாறு அன்போடு கேட்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், கெங்கவல்லி தொகுதிக்குட்பட்ட எஸ்.எம்.டி. 95 பேளூர் பால் கூட்டுறவுச் சங்கமானது 1–4–2009 முதல் செயல்பட்டு வருகிறது. இச்சங்கம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இச்சங்கத்தில் மொத்தம் 136 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். தற்போது 31*

உறுப்பினர்களிடமிருந்து நாள் ஒன்றுக்கு சராசரியாக 650 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு, சேலம் மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது. 2016–2017 ஆம் ஆண்டின் இறுதித் தணிக்கை அறிக்கையின்படி, இச்சங்கத்திற்குக் கட்டட நிதி எதுவும் இல்லை. மேலும் இச்சங்கத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு ஏதுவாக சொந்தமாக காலி மனையோ, அல்லது நிலம் வாங்குவதற்குத் தேவையான நிதி வசதியோ இல்லை. சேலம் மாவட்டத்தில் கிராம அளவில் 1,165 தொடக்க பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களும், மாவட்ட அளவில் சேலம் மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியமும் செயல்பட்டு வருகின்றது. இம்மாவட்ட ஒன்றியம் நாமக்கல் மாவட்டத்தையும் உள்ளடக்கியது. சேலம் மாவட்டத்தில் 402 தொடக்க பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. 763 சங்கங்கள் தனியார் கட்டடத்தில் இயங்கி வருகின்றன.

தமிழ்நாட்டில் 2016–2017 ஆம் ஆண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் சொந்த நிலம் கொண்டுள்ள 100 தொடக்க பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தலா ரூ.10 இலட்சம் செலவில் 100 புதிய கட்டடங்கள் ரூ.10 கோடி செலவில் கட்டித் தரப்படும் என்ற மாண்புமிகு அம்மா அவர்களுடைய அறிவிப்பினைத் தொடர்ந்து இதுவரை 79 சங்கங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டித் தரப்பட்டுள்ளன. அவற்றில் சேலம் மாவட்டத்தில் ஏழு பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தலா ரூ.10 இலட்சம் வீதம் ரூ.70 இலட்சம் செலவில் சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. இந்நிலையில் தொடக்க பால் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சொந்தமாக நிலம் இருப்பின், உரிய அனுமதியுடன் படிப்படியாகக் கட்டடம் கட்டுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியிருக்கின்ற கட்டடம் கட்ட மாவட்ட நிருவாகத்திடமிருந்து பால் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்ட நிலம் தரும்பட்சத்தில் சொந்தக் கட்டடம் கட்டுவதற்குத் தேவையான நடவடிக்கை இந்த நிதியாண்டில் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. மருதமுத்து அவர்கள்.

2018 மார்ச் 20]

திரு. அ. மருதமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 60, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி, மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.*

60—

தகவல் தொழில்நுட்பப் பூங்கா

***28259—திரு. எம். தமிமுன் அன்சாரி:**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் தொகுதியில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் எம். மணிகண்டன், தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தினந்தோறும் தீபம் ஏற்றி வணங்குகின்ற தெய்வம், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) திருச்சி, நவல்பட்டு கிராமத்தில் தமிழ்நாடு மின்னணு நிறுவனம்மூலம் 147.61 ஏக்கர் நிலப்பரப்பில் ELCOSEZ *எனப்படும் சிறப்புப் பொருளாதார மண்டலம் அரசால் உருவாக்கப்பட்டுள்ள நிலையில், நாகப்பட்டினம் தொகுதியில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதற்கான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் இருக்கையில் இல்லை. வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]